கான வடிவத்தையும் அமைத்தான்; அவனிடத்திற்குத் தான் திரும்பச் சேரவேண்டும். வானங்களிலும் புவியிலும் இருப்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்; நீங்கள் ஒளித்து வைத்திருப்பதையும் வெளியாக்குவதையும் அவன் அறிகிறான். மனத்திலிருப்பது இன்னதென்று ஆண்டவன் தெரிந்து கொள்கிறான்." (அல்குர்ஆன், 64:3,4).

கமலம்—2 1—5—20 இதழ்—5

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

நிரந்தரமான அற்புதம்.

இப்பூவுலகில் இதுவரையில் இஸ்லாமார்க்கத்தைத் தவிர இதர மதத்தலைவர்களாய்த் தோன்றியிருக்கும் மஹான்களென்று சொல்லப்படுபவர்களின் ஜீவிய சரித்திரங்களை யெல்லாம் நாம் ஆராய்ச்சி செய்யப்புகின் அவர்களுள் ஒவ்வொரு மஹானும் அநேக அற்புதங்களை (முஅஜிஸாத்துகளை)ச் செய்து காட்டியதாய் அவரவரின் சரித்திரத்தில் மட்டுமே எழுதி யிருப்பதைக் காண்கிறோம். அம் மஹான்க ளெல்லாரும் செய்து காட்டியதாய்ச் சொல்லும் அற்புதங்களெல்லாம் வாஸ்தவத்தில் அந்தவிதமாக நடந்திருக்க முடியுமாவென்று கண்டுபிடித்து நிச்சயப் படுத்துவதற்கு வேண்டிய உறுதியும் உண்மையும் நிறைந்த சாக்ஷி

யம் ஒன்றுமில்லை. அந்த அந்த மஹான்களின் சரித்திரத்தில் மட்டுமே அவரவரும் அற்புதங்கள் செய்ததாய்ச் சொல்லியிருப்ப தல்லாமல் அவ்வற்புதங்களெல்லாம் இப்போது நாம் கேள்விப்படுவதுபோலவே அக்காலத்தில் உண்மையில் நடந்தேறி யிருக்கக்கூடுமா வென்று ஆராய்ச்சி செய்யப் போதுமான வேறு ஆதாரங்கள் கிடைப்பதில்லை. நாம் கேள்விப்படும் அற்புதங்களைப்பற்றி அக்காலத்தில் தகுதியான ரிக்கார்டுகள் (Contemporaneous Records) ஏற்படவில்லை; ஆதலின் அவ்வற்புதங்க ளெல்லாம் உண்மையில் அப்படியே நடந்தேறி யிருக்கக் கூடுமென்று நாம் ஏற்றுக்கொள்ளுவதற்கு நம்முடைய மனம் கஷ்டப்படுகிறது. போதிய ஆதாரம் கிட்டாததால் அவ்வற்புதங்கள் இக்காலத்தினருக்கு ஒன்றும் பயன்கொடாம லிருக்கின்றன. அக்காலங்களில் அவ்வற்புதங்களைக் கண்ணால் கண்டவர்கள் இருந்திருக்கும் பக்ஷத்தில் அவர்களுடைய மனம் எப்படி யிருந்திருக்கு மென்று நம்மால் உணர முடியவில்லை. ஆனால் அவ்வற்புதங்களை மெய்யென்று எண்பிக்கத்தக்க ரிக்கார்டுகள் இல்லாமையால் இக்காலத்தினருக்கு அவ்வற்புதங்க ளெல்லாம் ஏட்டுச் சுரைக்காயாகவேயிருக்கின்றன. இவர்கள் அவற்றை நம்புவதற்கும் பின் வாங்குகின்றனர். ஆனால் அற்புதங்களை (முஅஜிஸாத்துகளை) ச் செய்வதெல்லாம் சாமான்யர்களுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்தி அவர்களைத் தாழ்மையிலிருந்து மேன்மைக்குக் கொண்டுவருவதற் காகத்தான் என்று மேலோர் சொல்வது மெய்யாயின், இதுவரையில் உலகத்தவர் சொல்லும் எல்லா அற்புதங்களைக்காட்டினும் மகா சிலாக்கியமாக எமது நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூலுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மூல்யமாய்

இவ்வுலகத்தவரின் ஈடேற்றத்தின் பொருட்டு எவ்வுலகுக்கும் வல்லவனாகிய அல்லாஹுத் தஆலாவால் 13 நூற்றாண்டுகளுக்குமுன் வெளியிட்டருளப்பட்டிருக்கும் எமது புர்க்கானுல் மஜீது என்னும் குர்ஆன் ஷரீபு மட்டுமே அரபு நாட்டிலும் இன்னும் இதரநாடுகளிலும் மன்பதையின் நம்பிக்கையை நாளிதுவரையில் மிக உறுதிப்படும்படி செய்து அவர்களை மிகத்தாழ்மையிலிருந்து இனியில்லா மேன்மைக்கு ஏகும்படி செய்திருக்கின்றது; இதரமதத்தினரின் எல்லா அற்புதங்களைக்காட்டினும் எமது குர்ஆன் ஷரீபு மகா சிலாக்கியமான உண்மையான அற்புதமாயிருக்கிறது. எமது நபிகள் பெருமானார் தங்கள் திருவேதத்தைக்கொண்டு அடைந்த வெற்றியைக்கண்ட அவர்களுடைய விரோதிகளும் குர்ஆன் ஷரீபின் மகிமையைப்பற்றி அதி சிலாக்கியமாகப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். எம்பெருமானின் அரிய வேலைகளை அதிக நுணுக்கமாய் ஆராய்ச்சி செய்துவரும் இதர மதவாதிகளான ஆங்கிலேயரும் தங்களுடைய "என்ஸைக்ளோபைடியாபிரிட்டானிக்கா"(Encyclopædia Britannica) என்னும் மண்டலமகாகிரந்தத்தில் எல்லா மதத்தலைவர்களைக்காட்டினும் எமது நபிகள் பெருமானார் "மகாவெற்றியை"(Most successful) அடைந்திருக்கிறார்களென்று எழுதியிருக்கிறார்கள்.

மனிதருக்கெல்லாம் மகோபகாரியாய் விளங்கும் பொருட்டு 13 நூற்றாண்டுகளுக்கு முன் அரபு தேசத்தில் திருவவதாரம் செய்த-எமது நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மூல்யமாய் மனிதர்கள் எவ்வளவு ஆச்சரியமான மகோன்னத சீர்திருத்தமெல்லாம் அடைந்தார்களென்பதை நீங்கள் உணரவேண்டுமாயின் முதல் முதல் அவர்

களுடைய திருவவதாரத்துக்குமுன் அந்த அரபுநாடு எப்படியிருந்ததென்றும் அவர்களுடைய சீர்திருத்தத்துக்குப் பின் எப்படியாயிற்றென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். எமது நபிகள் பெருமானாரவர்கள் மூல்யமாய் வெளிப்படுத்தப்பட்ட எமது அல்புர்க்கான் வேதத்தின் மகிமையால் கால் நூற்றாண்டின் கால அளவுக்குள் அரபு நாட்டாரின் பூர்வமதக்கொள்கை எல்லாம் அடியோடு ஒழிந்து அவருடைய நடையுடை பாவனைகளும் மிகமேலான நிலைமைக்கு மாறுதலடைந்துவிட்டனவென்றால் எமது திருநபியவர்களைப் பற்றியும் அவரது நிரந்தர அற்புதமான குர்ஆன்ஷரீபைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? அரபிகளின் நிலைமை மிகத் தாழ்ந்த அநாகரீகத்திலிருந்து அதிசீக்கிரம் மிக உயர்ந்த நாகரீகத்துக்கு வந்துவிட்டது. எம்பெருமானாருடைய காலத்துக்கு முன் அரபிகள் கல்லாலும் கட்டையாலும் செய்த அநேகம் ஆயிரக்கணக்கான விக்கிரகங்களையெல்லாம் தெய்வமென்று கொண்டாடி வந்தனர். அவர்களுடைய தெய்வங்களும் தெய்வக் கொள்கைகளும் அதி விசித்திரமானவையாயிருந்தன. தம்முடைய விக்கிரகதெய்வங்களாலேயே மழையும் வெயிலும் காற்றும் பனியும் உண்டாவதாக எண்ணினார்கள்; விளைபொருள்களுக்கும் அவ்விக்கிரகங்களை ஆதாரமெனக் கருதினார்கள். இன்னும் ஜீவப்பிராணிகளின் சுகதுக்கத்துக்கும் பிறப்புஇறப்புக்கும்அவ்விக்கிரகங்களே அதிகாரிகளென்றும் நம்பினார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் குலதெய்வம் ஒன்றுண்டு; அதைத்தான் தன் கடவுளென்று ஒவ்வொருவரும் அதற்குப் பூஜை செய்து வருவர். தன்னுடைய கஷ்டகாலத்தில் அவ்விக்கிரகத்தையே தனக்கு உதவிசெய்யும்படி அதன் பாதத்தில் விழுந்து கும்

பிட்டு வேண்டுவான் ; தனக்குவேண்டிய எல்லாப் பொருள்களையும் அதுவே கொடுக்குமென்று நம்புவான் ; தான் செய்யவேண்டிய சகல பூஜைகளையும் அவ்விக்கிரகத்துக்கே செய்து வருவான். தன் விக்கிரகத்தைத்தவிர வேறொரு தெய்வம் உண்டென்று கனவிலும் கருதினானில்லை. இவ்வாறு அரபுநாடு முழுவதும் விக்கிரக ஆராதனையானது ஆணிவேர் கொண்டு அநேக நூற்றாண்டுகளாக ஆழ்ந்திருந்ததனால் எம்பெருமானார் வருமுன் அவ்விக்கிரக ஆராதனை ஒருவராலும் நீக்கமுடியாமல் அவ்வளவு பலமாக வேரூன்றிக்கிருந்தது. இதுநிற்க.

அக்காலத்திய அரபிகளின் குணாதிசயங்களைப் பற்றிக் கவனிக்கும் பக்ஷத்தில் அவை எல்லாராலும் மிகவும் அருவருக்கத் தக்க வண்ணமாயிருந்தன. திருட்டென்பது அவர்களுக்குள் சாதாரணமான ஒரு தொழிலாயிருந்தது; தாரமென்றும் தமக்கையென்றும் வேறுபாடுகொள்ளாமல் அயலான் மனைவியை அபகரித்துக் கொள்வதோ சர்வ சாமான்யமான காரியமாய்க் கருதப்பட்டு வந்தது ; நிரபராதியானவர்களைக் கொலை செய்துவிட்டால் அது பாபமான காரியமெனக் கருதமாட்டார்கள் ; அயலாரைக் கொள்ளை யடிப்பதோ அவர்களுடைய தினப்பிரதி வேலையாயிருந்தது ; ஏழைகளை இம்சிப்பதும் அநாதைகளின் பொருளை அபகரிப்பதும் துர்ப்பலமுள்ளவர்களைத் துன்பப்படுத்துவதும் அவர்களுக்கு விளையாட்டாயிருந்தன. இப்படிப்பட்ட துர்க்கிருத்தியங்களுக் கெல்லாம் பின்னொரு சமயம் தாங்கள் தேவ சன்னிதானத்தில் தண்டனையடையும்படியிருக்குமென்று ஒருசிறிதும் எண்ணினார்களில்லை ; ஆனால் வல்லான் வகுத்ததே வாய்க்காலென்று தம் மனோபாவம் போல் நடந்து வந்தார்கள். மனிதராய்ப்

பிறந்தவர்கள் இன்னது செய்யத்தகும் இன்னது செய்யத் தகாதென்று ஏவல் விலக்கல்களை அவர்கள் உணர்ந்தவர்கல்ல; பெண்சிசுக்களை உயிருடன் மண்ணில் புதைத்து விடுவார்கள்; தன்தகப்பனுடைய மறுதாரத்தை முதல் தாரத்தின் மகன் தகப்பனுக்குப்பின் தாராளமாய்ப் பெண்டாளுவான். இவையெல்லாம் பாபமான காரியமென்று கனவிலும் கருதினார்களில்லை. சண்டைக்கொலையும் இரத்தப்பழியும் அவர்களுக்குள் சாதாரணமான தொழிலாயிருந்தன. “குடி” (மதுபானம்) என்பதோ அவர்களுக்குள் நிரந்தரமாய்க் குடிகொண்டிருந்தது. போஜனம் 3 வேளையும் மதுபானம் 5 வேளையும் செய்துவந்தனர்; “குடியாதவீடு விடியாது,” என்பதேஅவர்களின்கொள்கை. அந்த அரபிகளைவிட அக்காலத்தில் அதிகமாய்க் குடித்தவர்கள்வேறு ஜாதியாரில்லை. சிசுஹத்தியும் ஸ்திரீ ஹத்தியும் சாமான்யமாய் அவர்களிடத்தில் காணப்பட்டன. இவற்றோடு சூதாட்டமும் அளவு கடந்து அவர்களிடத்தில் காணப்பட்டது. இப்படிப் பட்ட அடாத காரியங்களுக்கெல்லாம் தாங்கள் ஜவாப்தாரியென்று ஒரு போதும் நினைத்தவர்களேயல்ல.

அக்காலத்திய நிலைமையைப்பற்றி ஸர்வில்லியம் மூர் என்னும் ஆங்கிலேயக் கிரந்தகர்த்தா பின்வருமாறு எழுதியிருக்கிறார்: “ முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய காலத்துக்குமுன் அரபு நாட்டிலிருந்த நிலைமையைக் கவனிக்கும் பக்ஷத்தில் அந்நாட்டில் ராஜாங்க சீர்திருத்தமாவது ஆசார சீர்திருத்தமாவது மத சீர்திருத்தமாவது செய்வது சற்றும் முடியாத காரியமாயிருந்தது. அவர்களுடைய விக்கிரக ஆராதனை அநேக நூற்றாண்டுக் கணக்காய் வேரூன்றியிருந்தது ; எகிப்து தேசத்திலிருந்தும் சீரியாநாட்டி

லிருந்தும் வந்த கிரிஸ்தவப் பாதிரிமார்கள் எவ்வளவோ பாடு பட்டும் அரபு நாட்டின் விக்கிரக ஆராதனையை அவர்களால் அசைக்க முடியவில்லை." இன்னும் அவரே சொல்கிறார்: "முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பால்ய திசையில் அரபு நாடானது தனது புராதனக் கொள்கையில் மகா பிடிவாதமுள்ளதா யிருந்தது. அப்போதிருந்தது போல் அதற்கு முன் எப்போதும் சீர்திருத்த வேலை அவ்வளவு கஷ்டமாய்க் காணப்படவில்லை." நஸாராக்களின் மார்க்கமும் எஹூதிகளின் மார்க்கமும் அநேக நூற்றாண்டுக்கணக்காய் அரபிகளின் விக்கிரக ஆராதனையை மாற்றப் பாடுபட்டுப் பார்த்தன. ஆனால் அதன் முடிவென்ன? மேலேசொன்ன ஸர்வில்லியம் மூர் என்பவரே அதைப்பற்றியும் பின்வருமாறு சொல்கிறார்: "ஐந்நூறு வருஷகாலமாய்க் கிரிஸ்தவ மதம் அரபு நாட்டில் பாடு பட்டும் அங்கங்கே ஏதோ சில கிரிஸ்தவர்கள்மட்டும் அபூர்வமாய்க் காணப்பட்டார்கள். எஹூதிகளின் மார்க்கம் கிரிஸ்துமார்க்கத்தைவிட அதிக பலமுள்ளதாயிருந்தும் அந்த அரபிகளை எஹூதிகளால் ஒன்றும் திருத்த முடியவில்லை. விக்கிரக ஆராதனை செய்யும் அரபிகளை நல்வழிப்படுத்த அந்த எஹூதிகளால் ஒரு சிறிதும் முடியாமல் போய்விட்டது."

இது வரையில் இவ்வுலகில் அவதரித்திருக்கும் வேறு எல்லா நபிமார்களின் சரித்திரங்களையும் இதர மதத்தலைவர்கள் எல்லாருடைய சரித்திரங்களையும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வோமாயின் சீர்திருத்த விஷயம் அவர்களில் ஒருவருக்குக்கூட எமது நபிகள் பெருமானுருக்கிருந்த கஷ்டம் போல் இருந்ததில்லை. மனிதர்களை மிகத்தாழ்ந்த நிலைமையிலிருந்து மிக உயர்ந்த நிலைமைக்குக்கொண்டு வருவதில் எம்பெருமானுர் ஏனையோரைவிட அதிக கஷ்டம் அடைக்

இருக்கிறார்கள். இவ்வாறிருந்தும் நம்பிக்கைக்குப் பொருத்தமில்லாத அவ்வளவு குறுகிய காலஅளவாகிய 20 வருஷ காலத்துக்குள் அரபு நாடு முழுவதும் எம்பெருமான் உதவியால் நாகரீகப்பிறழ்ச்சியை யடைந்துவிட்டது. ஒரு ராஜாங்கம் இன்னொரு ராஜாங்கமாக மாறிய ராஜாங்கப் பிறழ்ச்சியல்ல அது; அல்லது அடிமைத் தனத்திலிருந்த குடிகளை அரசுரிமைக்குரிய உன்னதப் பதவிக்குக்கொண்டு வந்த வெறும் பிறழ்ச்சிமட்டுமல்ல; ஆனால் உலகில் மகா கஷ்டமான காரியமென்று எல்லாராலும் கருதப்படும் மதப் பிறழ்ச்சியை எமது பெருமானாரவர்கள்(இவர்களுக்கு இறைவன் எல்லாவிதமேன்மையையும் பெருமையையும் கொடுத்தருள்வானாக) 20 வருஷகாலத்துக்குள் உண்டு பண்ணி விட்டார்கள். கிரிஸ்து மார்க்கத்தாலும் எஹூதிகளின் மார்க்கத்தாலும் பல நூற்றாண்டுக் கணக்காய்ப் போக்கடிக்கமுடியாத விக்கிரக ஆராதனையைச் சில வருஷங்களுக்குள் எமது இஸ்லாமார்க்கம் போக்கிவிட்டது. இஃதென்ன ஆச்சரியம்! தன் தாரமென்றும் பிறர்தாரமென்றும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லோரையும் ஏகமாய்ச்சோரம்புரிந்துகொண்டு கள் கொலை களவு பொய் சூது வஞ்சகம் முதலிய பாதகத் தொழில்களில் ஆழ்ந்துபோய்க் கூடாரங்களிலும் வீடாரங்களிலும் வசித்துப் பாலைவனப் பரதேசிகளாய்த் திரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் இரத்தப்பழி வாங்கும்படியான தலைமுறைச் சண்டைகளைப் பரம்பரையாய்ச் செய்து ஆடுகளையும்ஒட்டகங்களையும் மேய்த்துத் திரிந்த விக்கிரகத் தொழும்பரான அந்த அரபிகளை மிகக்குறுகிய 20 வருஷகால அளவுக்குள் ஒரே சகோதரத்துவமுள்ள இனத்தாராக்கி அவர்களுடைய மதமாச்சரியங்களையெல்லாம் போக்கி ஏக நாய

களைக் கொண்டாடும்படி செய்து மதவிஷயத்திலும் ராஜாங்கவிஷயத்திலும் லௌகிக வைதிகக் கல்விவிஷயத்திலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்றும் இன்றைக்கும் இவ்வுலகத்தார் சொல்லும்படி செய்து இவ்வுலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் அவர்களுடைய நல்லறிவுச் சுடரும் ஞானதீபமும் பரவும்படி செய்துவிட்டனர் எமது நபிகள் பெருமானாரவர்கள் என்றால் இஃதோர் ஆச்சரியமல்லவா? இக்காலத்திலும் ஐரோப்பா முதலிய கண்டங்களில் காணப்படும் நாகரீகமும் நல்லறிவும் நமது முஸ்லிம் மன்னர்களால் ஐரோப்பாவில் 500, 600 வருஷங்களுக்கு முன் ஊன்றப்பட்ட வித்தின் பயிர்தான் என்பதை எல்லாக் கல்விமான்களும் ஒத்துக்கொள்ளுகின்றனர். கல்லாலும் கட்டையாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களைத் தெய்வமென்று பல நூற்றாண்டுகளாக நம்பி வந்த அவர்கள் 20 வருஷ காலத்துக்குள் ஏக தெய்வக்கொள்கையைத் தாம் மட்டும் ஏற்றுக்கொண்டதல்லாமல் உலக முழுதும் அக்கொள்கையைப் பரப்பக் கங்கணம் கட்டிக்கொண்டனர்; மூடபக்தியில் மிகவும் மூழ்கிக்கிடந்த அந்த அரபிகள் உலகத்தவருக் கெல்லாம் பயன்படத்தக்க அறிவின் சுடராய் அதிசொல்ப காலத்துக்குள் விளங்க ஆரம்பித்துவிட்டனர். அஞ்ஞான அந்தகாரத்தில் அழுந்திக்கிடந்த அவர்களுக்கு ஞானோதயமும் நல உரிமைச் சுதந்தரமும் கொடுத்தது எமது திருக் குர்ஆன் வேதமல்லவா? அவர்கள் தங்களுடைய தீயகுணங்களையெல்லாம் மாற்றிக் கால் நூற்றாண்டுக்குள் சற்குண சீலர்களெனப் பெயர் பெற்றனர். அவர்களுடைய 5 வேளைக் "குடி"யும் 5 வேளைத் தொழுகையாய் மாறிவிட்டது. இராக்காலங்களில் அவர்கள் செய்துவந்த கேளிக்கைகளெல்லாம் இறைவனுடைய

தியானமாக மாறிவிட்டன. சிசுஹத்தியும் ஸ்திரீஹத்தியும் அடியோடொழிந்தன. பெண்களின் நிலைமையும் அவர்களின் சுதந்தரமும் அதிகமேன்மைக்கு வந்துவிட்டன. இக்காலத்தில் மேல் நாடுகளில் எவ்வளவோ கல்விநிறைந்திருந்தும் எவ்வளவோ நாகரீகம் மிகுந்திருந்தும் அவர்களுக்குப் பெரும் பழிப்பாகவும் எண்ண முடியாத கெடுதல்களுக்கெல்லாம் காரணமாகவும் இருப்பது அவரது "குடி" யல்லவா? இக் " குடி "யைநீக்க மேல்நாட்டார் எவ்வளவோ பிரயாசைப்பட்டும் இதுவரையில் ஒன்றும் பயன்படவில்லை. இப்படிப்பட்ட விலக்கமுடியாத "குடி"யைஎமது அல்புர்க்கான் வேதம் தனது ஒரே வாக்கியத்தால் 1300 வருஷங்களுக்குமுன் அடியோடு ஒழித்துவிட்டது. அரபிகள் ஒருவரை யொருவர் வெறுத்துக்கொண்டிருந்தவர்கள் இஸ்லாமிய சகோதரத்துவத்தில் ஈடுபட்டு மனிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் இருக்கும் ஜாதிநிற பாஷைபேதத்தை 1300 வருஷங்களுக்கு முன்னேயே ஒதுக்கிவிட்டனர். இதர நாடுகளில் இப்படிப்பட்ட சகோதரத்துவம் இன்னும் அனுஷ்டானத்துக்கு வராமலிருக்கிறது. எளியாரை வலியார் செய்துவந்த துன்பம்போய் அவ்வெளியாருக்காக வலியாரெல்லாம் தமது சொந்த ஐசுவரியத்திலிருந்து வருஷம் 1-க்கு 100-க்கு 2½-வீதம் வரிகொடுக்கவும் ஒத்துக்கொள்ளும்படியான விசேஷ மாறுதல்களெல்லாம் ஏற்பட்டு விட்டன. ஆகவே ஏழையும் பணக்காரரும் ஒரே நிலைமையில் சகோதரத்துவம் பாராட்ட ஆரம்பித்தனர். இஃதொரு விந்தை யல்லவா! இதுவியக்கத்தக்க சீர்திருத்த மல்லவா!!

மற்றெல்லா மதங்களிலுள்ள வேதங்களும் இவ்வுலகத்தைக்கருமம் நிறைந்த கடலென்றும், மாயாவுலகமென்

றும், துக்கசாகரமென்றும், பாபக்குவியலென்றும், சொல்லி மனிதர்களுக்கு இவ்வுலகில் ஒருவகை வெறுப்பையுண்டாக்கும்போது எமது அல்புர்க்கான் வேதமொன்றுதான் மனிதன் இவ்வுலகில் பிறக்கும்போது பாபமில்லாமல் பிறக்கிறான், அவனுக்கு ஆண்டவன் அபாரசக்தியையெல்லாம் கொடுத்திருக்கிறான், அந்தச் சக்தியை அவன் அளவுப்படி உபயோகிக்கும் பக்ஷத்தில் அவன் மகோன்னத திசைக்கு வருதல் முடியும், என்னும் இரகசியத்தை முதன் முதல் இவ்வுலகத்தவருக்குப் படித்துக் கொடுக்க ஆரம்பித்தது. மனிதன் கருமக் குவியலுடனும் பாபமூட்டையுடனும் இம்மாயாவுலகில் அவதரித்து அவஸ்தைப் படுகிறான், அவன் அப்பாபமூட்டையையும் கருமக்குவியலையும் தொலைப்பதுதான் அவனுடைய இகலோகக்கடமை என்று இதர வேதங்கள் முறையிடும்போது எமது திருமறை என்னசொல்கிறதென்றால்: 'மனிதனுக்கு அபாரசக்தி யெல்லாம் இறைவனால் கொடுக்கப்பட் டிருக்கிறது. அவன் பிறக்கும்போது கருமமும் பாபமும் இல்லாமல் பிறக்கிறான், அவன் தனக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட சக்தியைச் செம்மையாய் உபயோகிப்பானாயின் இகபரம் இரண்டிலும் அவன் மகா மேன்மைக்கு வருதல் முடியும்,' என்பதுதான். மற்ற மதங்கள் மனிதனுடைய இகலோகக் கடமையை எந்த இடத்தில் முடிவுசெய்கிறதோ அந்த இடத்தில் தான் இஸ்லாம் அவனது முயற்சியை ஆரம்பிக்கச் சொல்கிறது. பாபத்தையும் கருமத்தையும் துக்கத்தையும் இகலோகத்தில் போக்குவது இதர மதங்களின் தொழில்; ஆனால் இஸ்லாத்தின் நோக்கமோ பாபமற்ற மனிதர்களை மேன்மேலும் உன்னதப் பதவிக்குக் கொண்டேகுவது. இந்த உண்மையை மனித வர்க்கத்

தார் முதன் முதல் இஸ்லாத்தில் தான் கண்டனர். குர்ஆன் ஷரீபில் சொல்லிய உண்மைகளை எம்பெருமானார் அனுஷ்டித்துக் காட்டியதால் ஏனைய அரபிகளும் அந்த இரகசியங்களை யெல்லாம் தாமே அனுபவித்துப் பார்த்தனர். திருமறையும் அதை அனுஷ்டித்துக்காட்ட பெருநபியும் இருந்ததனால் 20-வருஷகால அளவுக்குள் அரபிகள் அவ்வளவு அளவு கடந்த மாறுதல்களை அடைந்தனர். ஒன்றும் விளையாத அரபுதேசத்துப் பாலைவனத்திலிருந்து ஞானச்சுடரையும் ஆத்மார்த்த உண்மைகளையும் பெற்றுக்கொண்டு அச்சாதியார் 20 வருஷகாலத்துக்குள் இதரர்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். இது என்ன அற்புதம்! நபிகள் பெருமானாரின் காலத்தில் மட்டும் தான் எமது திருமறை இப்படிப்பட்ட பிறழ்ச்சியை அரபிகளிடத்தில் உண்டாக்கியதென்று எண்ணவேண்டாம். அன்றுமுதல் இன்றுமட்டும் எமது குர்ஆன்ஷரீபு எந்த எந்த இடத்தில் நுழைகின்றதோ அந்த அந்த இடத்தில் எல்லாம் இதேவிதமான நாகரீகப்பிறழ்ச்சியை யுண்டு பண்ணியிருக்கிறது. இப்போது ஐரோப்பாவில் நிலை நின்று பிரகாசிக்கும் கல்வியும் சாஸ்திரஞானமும், ஐரோப்பியரைப் பின்பற்றிய இதரஜாதியாரிடம் காணப்படும் நாகரீகமும் ஞானமும் முதன்முதல் முஸ்லிம்களால் இவ்வுலகில் வேரூன்றப்பட்டவைதான். ஆதலின் இவ்வுலகில் இப்போது காணப்படும் எல்லாச்சாஸ்திர ஞானமும் குர்ஆன் ஷரீபால் முதன் முதல் வெளியாக்கப்பட்டதே. சுருங்கச் சொல்லுமிடத்து இவ்வுலகத்திய நாகரீகம் முழுமைக்கும் அஸ்திவாரம் முஸ்லிம்களின் திருமறையே.

மனிதனுடைய அபிவிருத்திக்குத் தக்கபடி குர்ஆன் ஷரீபின் போதனை 3 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

முதல் வகையாவது, மனிதனை மூடபக்திநிறைந்த அநாகரீகத்தின் பாதாளத்திலிருந்து அவனைமேன்மையான நாகரீக நிலைமைக்குக் கொண்டுவருவது; இதற்கு வேண்டிய முறைகள் குர்ஆன்ஷரீபில் மலிந்து கிடக்கின்றன. நாகரீக மேன்மைக்கு வந்த மனிதனை மகாசற்குண சீலனாக ஆக்குதற்கு வேண்டிய லலிதமான முறைகளும் எமது வேதத்தில் உண்டு; இது இரண்டாவது வகை. மூன்றாவது வகையால் சற்குண சீலமுள்ள ஒருவன் தன்னையும் தன் தலைவனையும் உணர்ந்து மகாமேன்மை பொருந்திய ஆத்மார்த்தமான பரிசுத்த நிலைமைக்குப் போய்த் தன்தலைவனுடைய இரகசியங்களை யெல்லால் உணர்ந்து அவனுடன் ஐக்கியப்பட்டுப்போகிறான்; இந்நிலைமைக்கு வந்தவுடன் அவன் தன்னையே மறந்து தன் தலைவனுடன் ஒன்றித்துப் போகிறான். அங்கே அபசாரங்களும் அனுசாரங்களும் நிகழ்வதில்லை. இவ்வுலகத்திய சுகதுக்கங்களெல்லாம் அங்கே மறைந்துவிடுகின்றன, எல்லாம் ஆனந்தமயமாயிருக்கும். பஷாரத்தை யடைந்து இறைவனுடன் கலந்தவர்களுக்கு இவ்வுண்மை நன்கு விளங்கும்.

அநாகரீகத்துக்குப் பிதாவாகிய சர்வ சாமான்யமான காட்டுமிராண்டி யொருவனை ஆத்மார்த்த ஞானமடையும்படி செய்து கடவுளின் சன்னிதானத்தில் அவனைக் கொண்டுபோய் விடும்படியான மகிமை எமது அல்புர்க்கானுக் குண்டென்றால் அதன் மகிமையை என்னென்று மதிக்கின்றீர்கள்! இன்று வரையில் இவ்வுண்மையை எமது திருமறை அநேகம் ஆயிரமாயிரம் முறை எண்பித்திருக்கின்றது. மனிதனால் எவ்வளவு மேன்மைக்கு வரமுடியுமோ அவ்வளவு மேன்மையையும் எல்லோரும் அடையும்படியான வழிகளைஎமது திருமறை காண்பிக்கின்

றது. இப்படிப்பட்ட மேன்மையான மாறுதல்களை இன்றைக்கும் கொடுப்பதால் தான் எமது குர் ஆன் ஷரீபை எம்பெருமானின் நிரந்தரமான அற்புதம் என்கிறோம். இந்த அற்புதத்தால் அறிவும் ஆத்மார்த்தமும் என்றென்றைக்கும் உண்டாகின்றன. இதரமதத்தலைவர்களின் அற்புதங்களோ எல்லாம் இறந்தகால அற்புதங்களாய் விட்டன. அவை புத்தகங்களில் மட்டும் ஏட்டுச் சுரைக்காயாகக் காணப்படுகின்றன; இக்காலத்திய மனிதவர்க்கத்துக்கு அவ்வற்புதங்களால் பயன் ஒன்றுமில்லை. ஆனால் எமது புர்க்கானுல்மஜீது என்னும் குர்ஆன் ஷரீபு மட்டும் எல்லாத்தேசங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் எல்லாச் சாதியார்களுக்கும் ஏற்றவிதமாகிய நிரந்தரமான அற்புதமாயிருக்கிறது. எமது குர்ஆன்ஷரீபு நிரந்தரமான அற்புதம் என்பதை இதன்கீழ்க் காணும் மூன்றுவிஷயத்தால் சுருக்கமாகநன்குணர்வீர்கள்.

முதலாவது, எமது திருமறை இகலோகத்தில் இன்பமுடன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய எல்லா முறைகளையும் மிகத் தெளிவாய் எழுதிக்கொடுத்து வைதிக முறையில் அவன் செய்யவேண்டிய இலேசான கடமைகள் இன்ன இன்னவையென்றும் இறைவனை அறிதற்குவேண்டிய எளியமார்க்கம் இன்னதென்றும் விளக்கிக்காட்டி அந்தத் தலைவனுடன் கலப்பதற்குவேண்டிய துறைகளையும் வெகு லலிதமாய்க் காண்பிக்கின்றது. இறைவனை எல்லோரும் உணரவும் அவனுடன் அனைவரும் கலக்கவும் வேண்டுமான துறைகள் எம் வேதத்தில் சொல்லியதுபோல் வேறு வேதங்களில் சொல்லப்படவில்லை.

இரண்டாவது, குர்ஆன் ஷரீபு சரியான உண்மைகளை வெளியாக்குவதுடன் தன் உண்மைகளை எண்பிப்பதற்குத்

தானே மகாபலமான ஆதாரங்களையும் எடுத்துக் காண்பிக்கின்றது.

மூன்றாவது, அறிவுக்கும் ஆத்மாவுக்கும் எப்போதும் பலத்தைத் தரத்தக்கதாய் எமது வேதம் அமைந்துள்ளது. குர்ஆன்ஷரீபால் உண்டாயிருக்கும் மாறுதல்களும் மேன்மைகளும் மிக ஆச்சரியப்படத் தக்கவையா யிருக்கின்றன. மகா கடினசித்த முள்ளவர்களையும் மகா மடயர்களையும் திருக்குர்ஆன் ஒருவிநாடியில் சற்குண சீலர்களாக்கி அவர்களை மிகப்பெரிய அரசர்களாகவும் பக்திமான்களாகவும் மாற்றி யிருக்கின்றது. சர்வ சாமான்யமான அடிமைகளையும் மிகப்பெரும் மூர்க்கர்களான மூடர்களையும் எவ்வளவோ மேன்மைக்கு எமது குர்ஆன் ஷரீபு ஒரேவிநாடியில் கொண்டுவந்திருப்பதுசரித்திரக் காரர்கள்கண்ட உண்மை. இதனால் தான் எமது திருமறை நிரந்தரமான அற்புதம் என்னப்படுகின்றது. இதைக்காட்டினும் இவ்வுலகில் வேறு நிரந்தரமான அற்புதம் ஒன்றுமில்லை. இது நிச்சயம்.

"எந்த மனிதனிடத்தி லிருந்து மற்றெல்லா மனித கோடிகளுக்கும் மிகுதமான நன்மையுண்டாகிறதோ அவர் தான் உங்களுள் மகா சிலாக்கியமானவர்." (நாயகவாக்கியம்)